**<u>In the Court of the District Munsif, Eranie</u>**

**Original Suit No. 65/2018** **Date:30.06.2025**

**(P.W.1)- சுரேஷ்**

<u>**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**</u>

1. நான் இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் குருசடி கட்டக்கூடாது என்று தடை உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் குருசடி கட்டுவதற்கு தடைகோரியுள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை நான் எனக்காகவும், உடையார்விளை ஊருக்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஊருக்கு நிர்வாகக் குழு உண்டு என்றால் சரிதான். மேற்படி குழவில் எனக்கு ஏதும் பொறுப்பு உண்டு என்றால் கிடையாது. எனது ஊரில் இந்துகோவில்களில் மேற்படி ஊர் நிர்வாகக்குழுவில் உள்ள நபர்கள் வரி பிரித்து கொடை நடத்துவார்கள் என்றால் சரிதான். எனக்கும், மேற்படி ஊர் நிர்வாகக் குழுவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் உண்டு.

2. மேற்படி ஊர் குழுவில் தலைவரோ, மற்ற பொறுப்பாளர்களோ,உறுப்பினர்களோ இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கை தன்னிச்சையாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் 3.340 சதுர லிங்ஸ் என்றால் சரிதான். மேற்படி சொத்தை பிரதிவாதி வாங்கும்போது மேற்படி சொத்தில் கட்டிடம் இருந்ததா என்றால் இருந்தது.1 முதல் 3 பிரதிவாதிகள் ஆர்.சி சபையை சார்ந்தவர்களா சி.எஸ்.ஐ சபையை சார்ந்தவர்களா என்றால் ஆர்.சி. சபையை சார்ந்தவர்கள். மேற்படி சங்கதியை எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் சி.எஸ்.ஐ பரிவை சார்ந்தவர்களும் உண்டு என்றால் சரிதான். எங்கள் ஊரில் இந்து சமயனரும், கிறிஸ்து சமயனரும் ஒற்றுமையாக உள்ளார்கள் என்றால் சரிதான். மண்டைக்காடு களவரத்தின்போதும் எங்கள் ஊர் அமைதியாக இருந்தது என்றால் சரிதான்.

**(P.W.1)- சுரேஷ்**

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**

3. 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்படி பட்டிகை சொத்தில் இருந்த கட்டிடத்தை எந்த தேதியில் இடித்தார்கள் என்றால் தெரியாது. அவர்களது கட்டிடத்தை இடிப்பதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு உரிமைப்பட்ட இடத்தில் சட்டத்திற்குட்பட்டு எந்த விதமான கட்டிடத்தை கட்டுவதற்கு உரிமை உண்டு என்றால் சரிதான். நான் 1 முதல் 3 பிரதிவாதிகள் தபசில் இடத்தில் சர்ச் கட்டப்போகிறார்கள் என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் அவர்கள் ஒரு அன்பியம் கூடி தபசில் இடத்தில் சர்ச் கட்டுவதாக பேசிக்கொண்டார்கள். மேற்படி சங்கதியை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிராது கட்டிடம் அமைந்துள்ள இடம் எந்த பஞ்சாயத்து என்றால் கல்லுக்கூட்டம் பஞ்சாயத்தாகும். மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்படி இடத்தில் கல்லுக்கூட்டம் பஞ்சாயத்தில் அனுமதி பெற்று வணிக கட்டிடம் கட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல, கான்கீரிட், மேல்தளம் போடப்பட்டுள்ளது.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் 01.10.2018-ல் 1 முதல் 3 பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியுள்ளதாக தெரியவருகிறது என்றால் சரிதான், பில்லர் அமைத்துள்ளார்கள். தற்போது கட்டிடம் முழுமையாக கட்டப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி புகார் சம்மந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி இடத்தில் சர்ச் கட்டவேண்டும் என்றால் திருச்சபை சட்டப்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் பிஷப்பிடம் மனு செய்து அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். மேற்படி பிஷப் அனுமதி தந்தால் தான் மேற்படி சர்ச் கட்டமுடியும் என்றால் சரியல்ல, ஆர்.சி சபையிடம் கேட்டபோது சர்ச் கட்டிய பின்புதான் அனுமதி தருவதாக கூறியுள்ளார்கள்.

**(P.W.1)- சுரேஷ்**

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**

5. மேற்படி சங்கதி தொடர்பாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மார்த்தாண்டம் கத்தோலிக் திருச்சபையின் பிஷப்பையும் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நபரை இவ்வழக்கில் கட்சி சேர்க்காததால் அவசிய தரப்பினரை சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகளின் நோக்கம் சர்ச் கட்டவேண்டும் என்பதல்ல என்றாலும் பொதுமக்களுக்கும் தொண்டு செய்வவேண்டும் என்பதுதான் என்றாலும் சரியல்ல. 1 முதல 3 பிரதிவாதிகள் நடத்திவரும் நற்பணி மன்றம் பதிவு பெற்ற மன்றம் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எந்த பிரிச்சனை என்றாலும் நிர்வாக குழு கூடும் என்றால் சரிதான். வழக்கு பிரச்சனைக்காக நிர்வாக குழு கூட்டப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டதா என்றால் இயற்றப்பட்டது.

6. மேற்படி தீர்மானம் தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தீர்மானத்தை தற்போது தாக்கல் செய்யமுடியுமா என்றால் கேட்டுப்பார்க்கவேண்டும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் நான் தன்னிச்சையாக அனுப்பியது என்றால் சரிதான். ஊர் நிர்வாக குழுவால் இவ்வழக்கிற்காக எந்த செலவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் எனது ஊரிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிராதில் தபசில் சொத்திலிருந்து 300 மீட்டர் தொலைவில் இசக்கியம்மன் கோவில், 250 மீட்டரில் செம்மண்குளம் இசக்கியம்மன் கோவில் அமைந்துள்ளதை காட்டவும் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கோவில்கள் தொடர்பான புகைப்படம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**(P.W.1)- சுரேஷ்**

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**

7. அவ்வாறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நீதியரசர் வேணுகோபால் அறிக்கைக்கும் அது தொடர்பான அரசாணைக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது பிரதிவாதிகள் தபசில் இடத்தில் வணிக கட்டிடம் கட்டி முடித்துவிட்டதால் வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மேற்படி இடத்தில் சர்ச் கட்டுவதற்கு எந்த நோக்கமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் வழக்குமூலம் இல்லாமல் போனதாலும் நான் அனுமானத்தின் அடிப்படையில் கூறுவதாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் இடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனையில் காரணமாக பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. தற்போதும் எங்கள் ஊரில் மத மோதல்கள் இல்லை என்றால் சரிதான், ஆனால் பிரச்சனைகள் உள்ளது.

8. தபசில் சொத்தின் அருகில் உள்ள சி.எஸ்.ஐ சர்ச் தபசில் சொத்தில் சர்ச் கட்ட எதிர்ப்பு தெரிவித்துள்ளார்களா என்றால் சரிதான். மேற்படி எதிர்ப்பு தொடர்பாக நீதிமன்றத்தில் நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சி.எஸ்.ஐ., ஆர்.சி. சபையினரும் இயேசுவைத்தான் வழிபடுகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சி.எஸ்.ஐ. சர்ச் நிர்வாகிகள் எதிர்ப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிர்ப்பு சொல்லப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் சி.எஸ்.ஐ சர்ச்சின் உறுப்பினர் இல்லை என்றாலும் அதனால் எதிர்ப்பு சம்மந்தமான சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. மேற்படி சி.எஸ்.ஐ சர்ச்சிலிருந்து புகார் ஏதும் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுக்கவில்லை.

**(P.W.1)- சுரேஷ்**

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு **குறுக்கு விசாரணை**

9. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்த தேதி என்ன என்றால் நினைவில்லை. மேற்படி ஆணையர் சொத்தை பார்வையிட்ட போது ஊர் நிர்வாக குழு தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் வரவில்லை என்றால் சரிதான், ஊர் மக்கள் இருந்தார்கள். சி.எஸ்.ஐ சபையினர் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்பதை தற்போதுதான் முதல் முறையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்